81

உ

சிவமயம்.

# திருச்செந்தூர்
# கந்தர்
# அற்புதமாலை.

## இரண்டாம் பாகம்.

இப்பிரபந்தங்கள்

செல்வமருதூர், கிராமமுனிசீப்

மகா-௱-௱-ஸ்ரீ

திருப்பாற்கடல்நாத பிள்ளையவர்கள்

விருப்பத்தின்படி

பத்தை பண்டிதன்குறிச்சி,

குலசேகரநாதக் கவிராயரவர்கள்

குமாரர்

பண்ணிருகைப்பெருமாள் கவிராயரவர்களால்,

இயற்றப்பட்டன.

தூத்துக்குடி, வேலாயுதம் பிரிண்டிங் பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

1920.

11

27. [illegible]

[illegible]. 1986

[illegible] 1986

[illegible]

உ

சிவமயம்.

# திருச்செந்தூர்

# கந்தர்

# அற்புதமாலை.

இரண்டாம் பாகம்.

இப்பிரபந்தங்கள்

செல்வமருதூர், கிராமமுனிசிப்

மகா-ள-ள-ஸ்ரீ

திருப்பாற்கடல்நாத பிள்ளையவர்கள்

விருப்பத்தின்படி

பத்தை பண்டிதன்குறிச்சி,

குலசேகரநாதக் கவிராயரவர்கள்

குமாரர்

பன்னிருகைப்பெருமாள் கவிராயரவர்களால்,

இயற்றப்பட்டன.

தூத்துக்குடி, வேலாயுதம் பிரிண்டிங் பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

1920.

உ

சிவமயம்.

1. கந்தர் ஒவ்வொரு மாதமும் செய்த அற்புதங்கள்.
2. ஸ்தலத்தின் மகிமை.
3. வாகனக் கவிதை.
4. ஷிக்ஷா நாம் வைபவம்.
5. சந்தான விரதம்.

கணபதி துணை.

## வசனம்.

ஒவ்வொரு நாளும் இரவும்பகலும் நடந்த அற்புதங்களைக் கண்டு தெரிசித்தோம். விஸ்வரூப மகிமையையுங் கேட்டு ஆனந்தித்தோம். இனிமேல் ஒவ்வொருமாதமும் நடக்கிற அற்புதங்களைக்கண்டு தெரிசிப்போம்,

### வைகாசி மாசம் கஜபசிபலி-வேறு.

செயமிகும்வைகாசி மாசத்தி னீதில்
தெய்வீக செந்தூராலயத்தி லன்று
நயம்பெருக வேண்டாம் பிரகாரத்தில்
நாவலர்கள் புகழ்மேவ தங்க மோத
வுயர்மயில்மேற் கஜபசி பலிதான் சுற்றி
உல்லாச மாகவருங் கால மெல்லாந்
தயவுடன்கந் தனிருந்த கோலங் கண்டு
தாரணியி லேசேவித் தருள்பெற் றோமே, (70)

### சித்திரை மாசம் சித்திரைவிசு-வேறு.

ஜெகமெலாம் விளங்குஞ் செந்திலம்பதியிற் சித்திரை விசுதனி லன்பற்
கிகபரமோக்ஷம் அருள்செய்யக்கன்னி இருவரோடாறுமா முகானீ
அகமகிழ்வோடு சகருபமாகி அன்னபி சேகங்கொண் டிருந்தாய்
முகமலர்ந் தடியோ ருடன்தெரி சித்தேன் முன்னின்று வினைகளைத்தானே

### சித்திரைபரணி-வேறு.

சீர்மிகுஞ்சித் திரைமாசம் பரணி தன்னிற்
சீரான வேலவனைத் தொழுதோ மென்னைப்
பெருமைபெரும் வயிரவராய்த் திருச்செந் தூரிற்
பிரியமுடன் வந்துசிறுத் தொண்டர் தம்மைப்
பார்புகழுங் கயிலாசஞ் சேர்த்தே யாண்ட
பரமனையுன் திருக்கோலங்கண்டா ரியாரும்.
பேரின்பம் பெற்றார்கள் நானுங் கண்டேன்
பிழைகள்பொ றுத் தடியேனை யாட்கொள் வாயே. (72)

### சித்திரைபௌரணிமை.

புண்ணியமா வந்சித்திரா பௌரணி மிநாள்
புகழ்செந்தூர்க் கந்தபுஷ்கர ணி வாரித்

தண்ணீரில் ஸ்நானமது செய்தே யுத்தன்.
சன்னிதிமுன் னின்றுதுதித் தடியா ரியாரும்
பண்ணியபா வங்களறுக் கருள்பெற் றார்கள்
பன்னிருகை வேல்முருகா குமரா என்றன்
கண்ணிறு ஒன்னருள்கண் டிங்கு வந்தேதன்
கவலைகாத் தெனையடிமை கொண்டாள் வாயே. (73)

சித்திரை வசந்தம்.

தேசமெல்லாம் புகழுந் திருச் செந்தூர் வாழுந்
திசைமுகனைச் சிறையிருத்துங் கந்தன் மேலாம்
வாசமல ரணிந்துநிந் திரைமா தத்தில்
வசந்தமொவ் வொருநாளும் விருந்த கோலம்
நேசமெலாங் கண்டுதெரி சித்து நின்றார்
நெறியில்லா நாயேனுங் கண்டு கொண்டேன்
ஆசையடி யார்கருத்தை முடித்தார் நாளும்.
அப்பொழுதே சுகம்பெற்றே னருள்பெற றேனே. (74)

சித்திரைகுத்திர கவிஞர் நோன்பு.

பத்தர்புகழ் செந்தூர்தெய் வானை வள்ளி
பன்னிருகை வேல்முருகன் கருணை போற்றி
சித்திரைமா சாமினர் நோன்பன் றைக்கு
ஜெகத்துள்ளோர் வந்துதெரி சிக்க நின்றேன்
புத்திசற்று மில்லாத நானுங் கண்டு
புண்ணியனைத் தெரிசித்தே னடிமை கொண்டான்
சித்தன்செய் யற்புதத்தை நினைத்து பாட
நீனொருபி லென்மனமக சிறந்து தேனே. (75)

வைகாசி வசந்தம் திருநாள்-வேறு.

வளமிகுந் திருச்செந்தூரில் வைகாசி வசந்தந் தன்னில்
இளமையா யிருக்குங் கோல மெவருக்குங் குளிரக்கண்டார்
அளவில்லா சடையாமோடு மறிரு கையா னுன்னை
உளங்கனி வாய்ச்சேவித்தேன் ஊழ்வினை தீர்த்தாள்வாயே.

வைகாசி விசாகம்-வேறு.

தேசமெல்லாம் புகழ்ந்தேத்துந் திருச்செந் தூரிற்
சிவகுருவே கந்தாவை காசி மாசம்

நேசர்களெ லாந்துதிகள் சொல்லி மேலா
நெறியுடனே விண்ணோர்கள் விசாகந் தன்று
வாசமலர் தூவிதெரி சித்து நிற்க
வர்ணமயி லேறிநீ நின்ற கோல
மாசையுடன் கண்டுதெரி சித்தே னுமே
னவமான மிடிசேர்பந் தீர்த்தாள் வாயே. (77)

ஷை ஆனி மீ உத்திரம் அன்னாபிடேகம்.

சுந்தரரூ பத்துடனே திருச்செந் தூரிற்
றுலங்கியமே தா ரானியுத் திரத்தி லன்றே
அந்தரர்துந் துமிபலவாத் தியமு ழங்க
வகங்களித்து முனிவர்குழாம் பலர்கொண் டாட
மந்திரங்க ளாலன்ன வபிஷே கங்கள்
மறையோர்கள் செய்யமனம் மகிழ்ந்து நின்றாய்
எந்தன்னிரு கண்குளிரத் தெரிசித் தேனு
னீசனே நடராஜா எனையாள் வாயே. (78)

ஆடிப்பூரம்.

மகிமைதரு மாடிமா சம்பூ ரத்தில்
மகிழ்ந்துபார் வதிக்காய்நீ செந்தூர் மேவி
ஜெகத்துயிர்கள் தழைத்தோங்க விண்ணோர் போற்றச்
சிறப்புடனே முளைக்கொட்டித் திருநாள் தன்னில்
முகமலர்ந்து குளிர்ந்தருளுங் காட்சி தன்னை
மூடனா னடியேனுன் னன்ப ரோடும்
அகங்களித்து கண்டுதெரி சித்துக் கொண்டேன்
அடிமைகொண்டு மிடியிடர்தீர்த் தெனையாள் வாயே. (79)

திருவாடிச்சோதி.

நலம்பெருகு மாடிமா சத்தி லென்றும்
ஞானமிகுந் திருவாடிச் சோதி யன்றே
உலகில்வெள் ளையானை யதை யனுப்பி
உத்தமர்சுந் தரர்சேரர் தமையாட் கொண்டாய்
நிலைபெறவே திருச்செந்தூர்க் கோயில் வந்து
நின்னடியார்க் கருள்புரிந்தா யுமையோர் பாகா

பலவடியா ருடன்கண்டு தெரிசித் தேனென்
பாவவினை களையெல்லாந் தீர்த்தாள் வாமே. (80)

ஆடியமாவாசி.

செல்வமிகு மாடியமா வாசி தன்னில்
சிறந்திருக்குஞ் செந்தூரிற் கந்தா நீதான்
வல்வினைதீர்த் தன்பர்களை யடிமை கொள்ள
வந்துநின்ற கோலத்தை யடியார் கண்டு
சொல்மாலை யாய்த்துதிசெய் தடி பணிந்து
சுகம்பெற்றா ரடியேனுஞ் செய்கை கண்டு
பலவிதமாய்க் கவிசெய்து துயர மெல்லாம்
படித்தேனென் வறுமைபிடர் தீர்த்தாள் வாமே. (81)

ஆவணியவிட்டம்.

வையகத்திற் பூரணையா வணிய விட்டம்
வருங்காலிற் றிரிசுதந் தார்க ளான
துய்யமறை யோரெவரு மொன்று சேர்ந்து
சுகமாய்ச்செந் தூர்க்கோயிற் புகுந்து கந்தன்
மெய்ப்படியைப் பணிந்தோம மிக வளர்த்து
வேதவிதிப் படிபூணூல் தரித்து மார்பில்
அய்யனிலை பூசித் தனம்பூ வாங்கி
அருள்பெருவா ரவர்மகிமை அதிக மம்மா. (82)

திருநாள் நடத்தக் காப்புக்கட்டுகிறது.

ஆவணிமா தவணிபூவு நடத்தப் பூரட்
டாதியிலே கந்தரும்பட் டருந்த மக்கு
நாவலர்போற் றும்அஸ்திர் தேவ ரோடு
நன்றுகுபே ரன்பட்ட ணம்போ யங்கு
மேவியபொற் கைமண்ணை எடுத்தே யிங்க
மேதினியிற் செந்திவிறு யவர்முன் வந்து
ஆவலுடன் முளைத்தெளித்துக் கையிற் காப்பு
அரன்மகிழக் கட்டி மகிழ் மூழ்கி னரே (83)

ஆவணி ஸ்ரீ அசுபதிநட்க்ஷத்திரத்தில் கொடியேற்றம்
அமரபக்ஷம் தெக்ஷிணாயனம் சிரியதிருநாள்.

ஆனந்தக் கடலாட்டுங் கந்த னுக்கே
ஆவணியார் சஞ்செந்தூ ராலை யத்தில்

ஞானமுள்ள பெரியோர்கள் திரண்டு நின்று
நலம்பெருங் கொடியேற்றி யலங்கா ரித்து
வானுலகோர் கண்டுமலர் மழைபோற் றூற்ற
மகிழ்ந்துதெரி சனஞ்செய்து கதிபெற் றார்கள்
நானுமிரு கண்குளிரத் தெரிசித் துய்ந்தேன்
நம்பினேன் கவலைவிட் டேன் நயம்பெற் றேனே. (84)

ஆவணித்திருநாள்.

அலைமருவுஞ் சந்தவரைச் செந்தூர்க் கோயில்
ஆவணியில் திருவிழாத் தினங்கள் தோறும்
பலவிதமாய் ஒவ்வொருநற் கோலங் கொண்டு
பவனிவந்தாய் வீதியெல்லா மடியார் நின்று
நலம்பெற்றார் கந்தாவுன் றனைச்சே வித்து
நாயேனுந் தெரிசித்தே யகங்கு ளிர்ந்தேன்
புலையனுக்கும் கடையேன்புன் மனதைக் கொன்று
புத்திதந்தென் கவலையைத்தீர்த் தாட்கொள் வாயே. (85)

கலசமாட்டு.

ஆவணிமா சக்கொடியை யேத்தி யன்பர்
அன்றுமுதற் பத்துநாட் திருவி ழாவும்
நாவலர்கள் புகழஅலங் காரஞ் செய்து
நடத்தியபின் பத்தாநாள் பகத்தி லேதான்
தேவர்புகழ் செந்தூரிற் கொடியி றக்கித்
தெளிவாய்வி சாகத்திற் கலச மாட்டும்
ஆவலுடன் செய்தருளைப் பெற்றார் கந்தன்
அடிபணிந்து சுகம்பெற்றோ மருள்பெற் றோமே. (86)

பிள்ளையார் சதுர்த்தி.

பரவைசூ ழுலகினிற்செந் தூரி னலை
பலன்றருமா வணிமாசஞ் சதுர்த்தி யிற்பன்
னிருகைவடி வேலனுக்கு முன்பு தோன்றி
இடர்களைத்தீர்த் தடியாரை ரெக்ஷித் தாளும்
ஒருகைமுக னேயிருந்த கணேச நாதர்
உண்மையுட னிருந்த திருக்கோ லத்தை
யருமையாய்ச் சிறியேனுந் தெரிசித் தேனென்
னூழ்வினைசெய் வறுமையெல்லாந் தீர்த்தாள் வாயே, (87)

புரட்டாசிமீ நவராத்திரிக்கொலு அலைவாயுகந்த பெருமானுக்கு.

புரட்டாசி நவராத்ரை கொலுவிற் செந்தூர்
புகழ்பெறுஞ்சுப் பிரமணிய ராலே பத்தில்
அருளலைவா யுகந்தபெரு மானே நீகல்
லவதாரஞ் செய்திருந்த கோல மெல்லாம்
பிரியமாய்க் கண்டுதெரி சித்தா ரன்பர்
பேரின்ப வீடுபெற்று மடியே னானும்
கருதியுனைக் கண்டுதெரி சித்தே னென்றன்
கவலைகள்தீர்த் தாட்கொண்டே எனையாள் வாயே. (88)

வசனம்.

அலைவாயுகந்தபெருமான் எடுத்த திருக்கோலங்கள் புரட்டாசிமாசம் பிரதமையன்று கேதாரநோன்பு என்ற மாநோன்பு ஆயுதபூசை முதற்றிருநாள் பத்தாந்திருநாளில் அன்றைக்குக் கந்தன் ஆயுதபூசை முடித்து ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வேட்டைக்குப் போறார்.

நொண்டிச்சிந்து.

திருவளர் புரட்டாசி பிரதமை
ஜெயந்தருங் கேதார நோன்பதனிற்
வருந்திரு நாளொன் றிற் செந்தூரில்
வாழ்கந்தன் பக்தர்கள் மனக்கனிய
தனக்குள்ள சயரூப மெடுத்துத்
தரணியி லேயருள் கொடுத்திருந் தான். (89) 1
கிளைக்குமன் பர்க்கெல்லாங் கந்தன்
கீர்த்தியுடன் றிரு நாள் ரெண்டில்
மனக்கவலை தீர்த்து ரக்ஷிக்கும்
மகாராஜனாய்க்கோல மெடுத்திருந் தான். (90) 2
திருமாலுமாய்க் கந்தன் மூன்றும்
திருநாளிலாதி சேடன் மேலே
பிரியாதவன்பர் கள் போற்ற
பிரியத்துடன்சய னித்திருந்தான். (91) 3
பார்க்குந் தவமுனிவர் காணப்
பன்னிருகையன்னி றாகா விலை

மாற்கண்ட ருசிச்சிவனை
மகிழ்ச்சியுடன்பூசை செய்திருந்தான். (92) 4

அஞ்சாந் திருநாளிற் கந்தன்
அருள்கொண் டேமயிலே றேயிருந்து
தஞ்ச மென்றவர்களைப் பார்த்து
தயவுடனே காட்சி கொடுத்திருந் தான். (93) 5

நீறுகண் டிகை பூண்டு நித்தம்
நேசர் சிவநாமஞ் சொல் வோர்க்கு.
ஆறு நாட் கந்தன் தயவு செய்
தம்பான் கோலங் கொண் டருள்புரிந் தான். (94) 6

உலகிற் செந்தூரில் வந்து
உண்மையுடன் பணி செய்வோர்க்கு
நலமாய் ஏழாநாட் கந்தன்
நடராஜமாயிருந் தருள்புரிந் தான். (95) 7

இருடையோர் பெட்டாம் நாள்த் தவமுங்
இருவிட்டணன்போல் வெண்மை திருடிக்கொண்டு
மருவார் குழல்வள்ளி நாயகன்
மகிழ்ந்தண்ட ரைப்பார்த் தருள்புரிந்தான். (96) 8

உள்ளங் கனிவாகித் திருநாள்
வொன்பதி லேசக்தி றுமூர்த்தி
வள்ளலைப் போலிருந்து கந்தன்
வந்தடி யார்க்கெல்லாம் வரங்கொடுத்தான். (97) 9

திருநாள் பத்ததிலே விஜய
செகமியன் றுபுகல் கலை யெடுத்து
பெருமிக மாய்க்கந்தன் மாவேறி
தெருவினில் வேட்டை யாடினனே. (98) 10

வே-ஞூஒன்பதாம்நாள் சரஸ்வதி பூசை செய்கிறது விருத்தம்.

தண்மலர்க் கமலமீது சதுர்முக னுடன்செந்தூரில்
மன்னவர் விண்ணோர்க்கெல்லாம் வரும்புராட்டாசிமாசம்
கன்னிதாயக் கல்விபெல்லாங் கற்பிக்க இருந்தாய் கண்டேன்
பெண்சரஸ் வதிநல்வாக்கு பேதைமேற் கருள்செய்வாயே.

### மகாளேஷ்டபு.

வரும்புரட்டாசிதன்னில் மாவன்பு கரங்கொண் டெய்த
தரைதனில் வன்னிராசுந் தன்னுயி ரதனைக் கொன்று
விரிபுகழ் திருச்செந்தூரில் வீற்றிருந் தடியார்க் கெல்லாம்
அருள்கொடுத்தாளுங்கந்தா அடியேனை ரக்ஷிப்பாயே (100)

### வேறு-புரட்டாசி மாளையபக்ஷமமாவாசி.

புகழ்திருச்செந் தூர்க்கடலில் தீர்த்தமாடி
புரட்டாசி மாளையபச் சம்மா வாசை
அகன்றுளிரப் பிதிர்கள்கடன் முடித்துநல்ல
அன்பர்களுன் திருக்கோலக் காட்சி கண்டு
இகபரமோ க்ஷம்பெற்றார் அவர்களோடும்
இன்பமுட னருமுகா நானுங் கண்டு
முகமலர்ந்து தெரிசித்தே துதித்து நின்றேன்
மூடனென்னை புன்வினைதீர்த் தாளு வாயே. (101)

### புரட்டாசி மாசம் சனிவாரம் பெருமாளுக்கு.

நன்னயஞ்சேர் புரட்டாசி மாசந் தன்னில்
காட்டிறுள மேலோர்க் கருள்கொடுல க்ஷிமீபதிதான்
கன்னல்மொன் செய்பரங்க நாத னேறு
சனிவாகிச் சனிவாரந் தோறு நல்ல
மன்னர்புகழ் செந்திலமுரு கையன் வள்ளி
மணவாள னுலையத்தில் மகிழ்ந்தி ருந்தாய்
என்னிருகண் குளிரவே தெரிசித் [illegible]யர்தேன்
சனைக்கன்பார்க் கிடர்பிடித்தீர்த் தாளுவாயே. (102)

### அற்பசி மாசம் அற்பசி விசுக்கு.

காதலாய்த் திருச்செந்தூர் நகரில் வந்து
கந்தபுஷ்க் கரணிகடற் றீர்த்த மாடிப்
பாதகங்கள் தீர்க்குமைப் பசி விஷுவில்
பன்னிருகை வேல்முருகா வுன்னைக் கண்டு
அகசன் வென்னிடர்தீர்த் தாட்கொள் ளென்று
அன்பர்கள்சேர் இக்கவசம் பெற்றுய்ந் தாசன்
நீதனே அடியேனுக் கன்னு மன்னே டை
நிதம்புவாச் சிந்தையெமக் கருள்செய் வாயே (103)

வேறு.

பத்தநாளக் கோயிலைக் கொண்ட கந்தன்
பாதிற்செந் தூரிலைப் பசிவி ஆவில
சித்தமகிழ் வாய்முகமே பாருருப் பின்றன
சேர்ந்தடியா ரன்னமயி டேசஞ் செய்தார்
சத்தரிசி முனிவர்தா ளிபோர்கொண் டாடத்
தாய்வள்ளி தெய்வானை மேலே யனப்
வைத்தவனைக் கண்டுதெரி சித்துக் கொண்டேன்
மனக்கவலை யற்றுமகிழ் மூழ்கி னேனே. (104)

ஐப்பசி மாசம் தீபாவளி.

பாரிலைப் பசிதீபா வளியி லீசன்
படர்கரசா சூரனையே கொன்ற நாளில
பேர்பொருந்தப் பண்டிகைகொண் டாடி யோர
போனைத் தனைத்தக்கொண் டலகோ ரியாரும்
தாரணியுங் கடப்பமலர்க் குமரா செந்தூர்ச்
சண்முகனை வந்திருச்சந் நிதிமுன் னின்று
சீர்பெறவே தெரிசித்தா நடனைக் கண்டு
தெரிசித்தே னென்கவலை தீர்த்தான் வாமே. (105)

கந்தசஷ்டி.

கார்பொழியு மைப்பசிமா சத்தில் வந்த
கந்தசஷ்டி யில்த்தேவர்க் கிடுக்கண் செய்த
சூரனைச்சங் கரித்தயா பயில்மே லேறிச்
சுகமான வாறுமுகத் துடனே யென்றும்
பாரிலுயர் செந்திநகர்க் கோயில் வந்து
பழுவையா நடனே யிருந்த கோலந்
தாரணியோ நடனின்று தெரிசித் தேனென்
சண்முகனை வினைகளைத் தீர்த் தனையாள் வாழியே. (106)

வேறு-அரசங்காரனுக்கு திருக்கலியாணம்.

தொண்டர்கள் போற்றுஞ் செந்தூர்ச்
சப்பிர மணியா நீதான்
அண்டரு மகிழத் தெய்வ
யானையை மைப்ப சியில்

மண்டபத் திருந்து செய்த
மணக்கோலக் காக்ஷி யெல்லாம்
கண்டோனை தெரிசித் தேனென்
கவலையைத் தீர்த்தாள் வாமே. (107)

கார்த்திகை மாசம் திருக்கார்த்திகையில்-வேறு

வருகின்ற கார்த்திகைமா சத்தி லேதான்
வடிவேலன் சண்முகவி லாச முன்பு
திருக்கார்த்தி கைதீபத் திராத்தி னத்தில்
திசைமுகன்மா லகத்தியர்க்குக் கருணை செய்யப்
பொருந்திக்கீழ் பாதாளம் வானு முட்ட
மூவுலகெ லாஞ்சோதிச் சுடராய் நின்ற
அரன்மகிமை திருக்கோலக் காக்ஷி யைக்கண்
டகங்குளிரத் தெரிசித்தே அருள்பெற் றேனே. (108)

கார்த்திகை மாசத்து அட்டமி.

வருகார்த்தி கைமாசத் தட்ட மிநாள்
வளமிகுஞ்செந் தூர்க்கந்த னாலயத்தில்
அருள்நாம்பெற் றெண்பகர் தேவருக்கும்
அபிடேகம் நைவேத்தியந் தூப தீபம்
பிரியமாய்ப் பிரமனைப்போ சண்முகன்கண்
பேரானைத் தங்கொண்டு செய்து வைத்தான்
தெரிசனஞ்செய் தாரடியா ருடனே யானுந்
தெரிசித்தே யருள்பெற்றேன் சுகம்பெற் றேனே. (109)

வேறு-கார்த்திகைச் சோமவாரம்.

வள்ளியம்மை திருப்பாத மலர்ப்போது முடிக்குமணி நாதகந்தன்
புள்ளிமயி லேறிவிளை யாடுதிருச் செந்தூரில் புகழ்சேர் லிங்கம்
வெள்ளிமலைச் சிவன்கார்த்தி கைச்சோம வாரத்தில் விருப்பத்தோடு
இன்னையில்லா அன்பர்க்கோலக் காத்தமுர்த்தான் தெரிசித்தோம் கதிபெற்றோமே.

வேறு-மார்கழி மாசம் திருப்பள்ளி எழுச்சி.

சிவனருள்பெருகு மார்கழிமாசம் திருப்பள்ளி எழுச்சி செந்திற்கண்
புவனத்துள்ளோரை யிடர்களைவதான புண்ணிய னெம்முருகன்
களித்துநின்ற கோலத்திவள்ளியம்மைசக் கண்டடியாருடனின்று
பழவினைதீர்த்துத் தெரிசித்தேனானது பதந்தன்பு தந்தருளுமே. (111)

### வேறு-திருப்புளிச்சைகாலக்ஷேத்ரம்.

கயிலைமலை நாதனருட் காந்தன் சொந்தார்க்
கதியதியாய் வந்துமார் கழிமா சத்தில்
ஜெயம்பெருகுந் திருப்புளிச்சைக் காலக்ஷேத்ரம்
சிவனடியார் கண்டுதெரி சிக்க நின்றான்
சயம்பெற்றா ருலகத்தி லன்னோ ரியாரும்
நாதனருட் கோலத்தைக் கண்டு நாயேன்
பயமற்றே னென்னையடி மை கொண்டா னென்றும்
பன்னிருகை வேலனையே பாடு வேனே. (112)

### மார்கழி மாசம் உதயகாலங்கந்தன் பள்ளியறையைவிட்டு எழுந்தருளுவது.

மாதவங்கள் புரிசெந்தூ ராலயத்தில்
மார்கழிமா தருதய கால மெல்லாம்
காதல்மிகுந் தெய்வானை வள்ளி காந்தன்
கருணையாய்ப் பள்ளிவிட்டுச் சிவிகை யேறி
நீதியுடன் தெய்வானை கோயின் முன்போய்
நின்றடியார்க் கருள்புரிந்து வந்த கோலம்
ஆதரவா யன்பர்நின்று தெரிசித் தார்நின்
றடியேனுந் தெரிசித்தே யருள்பெற் றேனே. (113)

### திருவாதிரை நடராஜருக்கு.

மார்கழிமா சத்திருவா திரைநாள் தன்னில்
மறையோர்கொண் டாடவாத் தியமு ழக்கச்
சீருடனல் லன்பர்திரு வெண்பாப் பாடத்
தேவாரம் புராணந்திருப் புகழ்ப் பாட
கோராய்நா யகர்வீணைக் கியானம் பாட
நீடனமா டிநின்றாய் திருச்செந் தூரிற்
பார்புகழுஞ் சபையில்நட ராஜ னுன்னைப்
பார்த்தடியா ருடன்சேவித் தருள்பெற் றேனே. (114)

### பார்பதியம்மாளுக்கு ஊஞ்சல்.

கடற்கரைச்செந் தூரக்கந் தனைப் பத்தி
கறைக்கண்டன் சேருமைபார் பதிதே விதனை

இடங்கொண்டே இலகுநாகப் பட்டினத்தில்
இருந்தானஞ் சலாபிஷேகா லத்தி லல்லை
அடியார்கள் மார்கழியா திரையிற் கண்டே
ஆனந்தங் கொண்டுதுதித் தருள்பெற் றார்கள்
பிடியுடையே யவர்களுடன் தெரிசிக் கின்றேன்
வேதனைதீர்த் தாட்கொள்ள விரும்பு வாயே. (115)

### ஸ்ரீராமர் பூசித்த லிங்கம்.

மகிமைதருஞ் செந்தின்மா நகரிற் கந்தன்
வள்ளிதெய்வா னையொடு மால யத்தில்
ஜெகமெலாம் புகழ்திருமால் தேவி யோடு
சித்தமகிழ் வொடிருந்து பூசை செய்த
பகவானை ஸ்ரீராம லிங்கத் தைநான்
பணிந்தடியா ருடன்றுதிகள் பலவுஞ் சொல்லி
அகங்குளிர வேகண்டு தெரிசித் தேனென்
ஆசைநிறை வேறிடவே யருள்பெற் றேனே. (116)

### வைகுண்ட ஏகாதசி.

திருமாலுந் தேவியுடன் ஜெகத்தி லாண்டிற்
சேர்ந்துவரு மார்கழியிற் றிருச்செந் தூரில்
வருமவைகுண் டவேகா தசிதி னத்தில்
வள்ளிநா யகனோடு பத்தி யென்னும்
அருள்வடிவு கொண்டுசெப மதத்தின் மீதில்
ஆனந்த மாய்ச்சயனித் திருந்தா ரந்தத்
திருக்கோல மதைக்கண்டு நாங்க ளியாரும்
கண்குளிரத் தெரிசித்தோங் கதிபெற் றோமே. (117)

### தைச்சங்கிராந்தி.

தைச்சங்கி ராந்திமா சப்பி றப்பிற்
சரவணப வாகுகனே கந்தா வென்னை
வையகத்திற் றிருச்செந்தூர் நகரிற் சார்க
விளக்குகைக்கோ விலடியார் பணிந்து நின்று
மெய்ப்பொரு மானந்தக் கண்ணீர் சோர
விருப்பமுடன் கண்டுதெரி சித்துய்ந் தார்கள்

அய்யனே நின்னடிமையைப் பரிந்து கண்டேன்
ஆதார மில்லையெனக் கருள்செய் வாயே. (118)

சுந்தரமூர்த்தி நாயனாரிடத்தில் வழிப்பறி.

அப்பொன்வகை சேரன்தந் தானந் தனக்கே
அருளியதைக் கொண்டுவரும் வழியிற் பூதம்
எம்பிரா னேவலினுற் கள்ளராகி
இடையிற்போய்ப் பறிசெய்து போன தற்பின்
நம்பன்மேல் மனதுருகிப் பதிகம் பாடி
நற்பொருளைப் பெற்றுயர்ந்த தில்லைச் செந்தூர்
உம்பர்கள்போற் றுங்கந்த னாலயத்தில்
உண்மையுடன் கண்டுதெரி சித்துய்ந் தோமே. (119)

தை மாசம் இரண்டாந்தேதியில் பாரிவேட்டை.

இடர்நீங்கு கலியுகமா மாண்டு தோறும்
இடையில்வருந் தைமாசந் தேதி ரண்டிற்
கடல்சூழ்ந்த வுலகிற்செந் தூரி லென்றுங்
கருணைபொழி சந்தவரைக் குகையில் மேவும்
படைசூழ்ந்த சூரனைச்சங் காரஞ் செய்த
பன்னிருகை வேல்முருக னாலயத்தில்
நடந்துவரு மற்புதத்தி னிகழ்ச்சி யொன்று
நலம்பெருக மனமகிழ்ந்து நல்கு வேனே. (120)

பாரிவேட்டை.

எத்திசையோர் போற்றுஞ்செந் தூரினிற்பன்
னிருகைவடி வேலனைத் திரண்டாந் தேதி
பக்தர்களு முக்குதிரை வாகனத்திற்
பாரிவேட்டை யாடிநீ வந்த கோலம்
முத்திபெற நிதியெலா மடியார் கண்டு
முன்சென்று அடிபணிந்து சுகம்பெற் றுங்கள்
சத்திவடி வேலாவுன் னருளைக் கண்டு
சரணமடைந் தேனென்னை யாட்கொள் வாயே. (121)

தைப்பூசம்.

பாண்டியன்றன் மகள்குதிரை முகத்தை மாற்றும்
பாவத்தைத் தீர்க்கும்வது ரைம் பத்தில்

ஆண்டிற்றைப் பூசத்திற் றீர்த்த மாடி
அன்பர்இருக் சக்கவரைக் குகையில் வந்து
வேண்டியதோத் திரம்பலவுஞ் சொல்லி யுன்னை
விருப்பமுடன் தெரிசித்தா ரவரை யெல்லாம்
ஆண்டாய்செக தூரில்வேல் முருகா நீதான்
அடியேனுந் தெரிசித்தே யாட்கொள் வாயே. (122)

பத்தர்கள் தீபம் தையமாவாசி.

தையம்மா வாசிபத்தர் கள்தீ பத்தில
சண்முகநா தாசெந்தூ ராலே யத்தில்
மெய்வளருஞ் சிவஞானப் பொருளுள் ளோர்கள்
விருப்பமுடன் கண்டுதெரி சிக்க நின்றாய்
ஐயாவுன் திருக்கோலத் தியல்பைக் கண்டே
ஏழையடி யேனுஞ்சே வித்து நின்றேன்
பொய்வளர்செய் வினைச்சத் துருவைக் கொன்று
புண்ணியனே யுனக்கருள்செய் தாட்கொள் வாயே. (123)

கும்பாபிடேகம் களபம் தை உத்தரம்.

பக்குவமாய்த் தைஉத்தி ரத்தி லெங்கள்
பன்னிருகை வேல்முருக னன்பர் காணத்
திக்கெல்லாம் புகழ்செந்தூ ராலயத்திற்
தெய்வானை வள்ளியுடன் வேல்பிடித்து
முக்கியமும் அபிடேகத் தினந்தற்கு
முகஜோதி லேகனபக் கரித்து நின்றார்
சக்கண்மகன் திருக்கோலங் கண்டெல் லோரும்
சுகம்பெற்றார் நானுங்கண் டருள்பெற் றேனே. (124)

தைஉத்தரம்.

சண்முகனைப் பேண்டவந்தாக் கலியுண் டாகும்
கல்லகட லரண்டவராக் களித்துச் செந்தூர்
மேன்மைபெற மகிழ்ந்திருக்குங் கூபா மண்யா
விரும்பித்தை உத்தரத்தி லடியா ரியாரும்
தேனிநீர் பால்தூசெய் கனிவர்க் கங்கள்
தெளிந்தபிடே கஞ்செய்ய நின்ற கோலம்
நான்கண்டு தெரிசித்தே னடியார் சேரும்
நமனவந்து தொடாமலாட் கொள் வாயே. (135)

## மகாஅபிடேகம்.

பத்தியுட னேமன்றமன் மொழியக் கேட்டுப்
பாரிற்றை மாசந்தேசக் அரில் வந்து
எத்திசையோ ருங்களிபால் செய்வர்த் தங்கொண்
டினியமகா அபிடேகஞ் செய்ய நின்றாய்
சத்திவடி வேலாவின் னருளைக் கண்டு
சபணியோரு ருடன்தெரிசித் தேனெனக்கு
முத்தியுறப் பத்திபுத்தி தெளிவுங் கொண்டு
புண்ணியமென விடியி ர்திர்க் கருள்செய் வாயே. (126)

## மாசி மீ அசுபதி நட்சேஷத்திரத்தில் கொடியேற்றம் பெரியதிருநாள் பூர்வபட்சம் ருத்திராயணம்.

கருணைநெறி புரிசெந்தூ சாலை யத்திற்
கந்தனுக்கே அன்பரெலா மொன்று சேர்ந்து
மருமலரால் விதிப்படியே பூசை செய்து
மாசிமா தங்கொடியை யேற்றி நின்றே
உரிமையுடன் தெரிசித்தா ருலகோ ரியாரும்
உம்பர்களு மலர்மாரி பெய்து கண்டார்
திருமனதி னேறிநா யேனுங் கண்டே
யுடன்பணிந்தேன் சுகம்பெற்றேன் வினைவிட்டேனே. (127)

## திருவிழா.

வையகமெலாம்புகழுஞ் செந்தூர்க் கோயில்
மாசிமா தத்திருவி ழாவில் லன்பர்
உய்யவே முத்திமை நல் குக்கத் தாவுன்
அவ்வொருநாள்த் திருக்கோலத் திப்லைக் கண்டு
கையிரண்டுஞ் சிரமேற்றிக் துதித்தார் யாருங்
கதிபெற்று ரவர்களுட னாயே னின்று
மெய்யனே தெரிசித்தேன் கவலை யோடு
வினைப்பிறவி நோய்களையுந் தீர்த்தாள் வாயே. (128)

## தாகத்துக்குக்கொடுக்கிறவர்கள்.

சன்முகனென்செந் தூரிலே தனிற்றெய் வானைத்
தாய்வள்ளி யோடிருக் காலமெல்லாம்

பண்விலகா தந்தனோர்கள் வேதந் தசைம்
பஜனைந்த வாரமுதற் படிப்போ ரியார்க்கும்
தண்ணீரா மோர் கற்கண்டு பானகம் பால்
தகைதீரச் சுக்குவெல்லஞ் செல்லாங் கொண்டே
உண்மையாய் மகிழ்ந்தன்று தருவா ரைப்பார்த்
துலகதனிற் கணக்கிலமைத் துரைக்கொண் ணாதே (129)

கலசமாட்டு.

செந்திலமா சித்திருநாள் முடிந்த பின்பு
தெள்ளுமறை யோர்கலச மாட்டிச் செய்து
கந்தாவுன் றனைச்சிங்கா ரித்துப் பார்த்தார்
கருணையுடன் வீகின்ற கோல மெல்லாம்
அந்தரங்க மாயடியார் கண்டு நின்று
ஆனந்தக் கண்ணீர்விட் டருளைப் பெற்றார்
எந்தனிரு கண்குளிர வடியே னுங்கண்
டிருகைதொழு தேன்மகிழ்ந் தாறு வாரே. (130)

தெரிசனம்.

வளங்கள்மிகுஞ் செந்தூரா வைத்தி மேலகல்
மாசிஅசு பதிநட்சத் திரத்தி லன்று
உலகனிவாய்க் கொடியேற்றித் திருநாள் பத்தும்
உமைமகன்செய் வேளாறு முகவ னுக்கே
அளவிலா தானங்கம் பெருகச் செய்தார்
அன்பரெலாந் திருவிழா முடிந்த பின்பு
வளங்குமறுங் கலசமாட் டுஞ்செய் தார்கள்
கவலையற்றுக் கந்தனையே தெரிசித் தேனே (131)

சிவராத்திரி.

மாசிமா சஞ்சிவராத் திரியிற் செந்தூர்
வரைகத்தோ ரயில் வள்ளிதெய் வர்னை மாதர்
நேசனை நவவீர ரோடு நீதன்
[illegible]ன்சொளிருங் கோலத்தை யடியார் கண்டு
வாசமுள்ள பாலனைகயா [illegible] டித்து
மலைனிந்த நாற்கால மர்ச்சித் தேத்தி

பூவித்தா ரடிமைகளாடு தெரிசித் தேனுன்
பொன்னடிகட் காளாக்கி யருள்செய் வாயே (132)

பைங்குனி யுத்திர நக்ஷத்திரம்.

பைங்குனி யுத்தரநட் சேத்தி ரத்தில்
பத்தர்புகழ் திருச்செந்தூ ராலை யத்தில்
தங்கியடி யார்க்கிரங்கி யருட்கண் பார்த்துத்
தயவுடனன் மோக்ஷகதி கொடுத்து நின்றாய்
பொங்கரவ மணிக்கதில துமையாள் பாலா
புண்ணியனே சண்முகனே கந்தா வேலா
எங்கள்வினை தீர்க்கருட்கண் ணாலே பார்த்தே
ஈசனே யின்பசுகந் தந்தாள் வாயே. (133)

வள்ளியம்மை கலியாணம்.

முந்திநா ரதர்மொழியைக் கேட்டுக் கன்னல்
மொழிவள்ளி நாயகியைக் காதலோடு
தந்திரமே டன்கொண்டு வசப்படுத்தித்
தாணியிற்பங் குனியுத்தர நாட் டன்னில்
எந்தவுல குட்டணிய மானதாய் நல்ல
இன்பமுறுஞ்செல் வமுமன்பர்க ளளித்தாய் செந்தூர்ச்
சந்தவரை தனிலமர்ந்தாய் கண்டு கொண்டேன்
சண்முகனே யென்வினைதீர்த் தாட்கொள் வாயே. (134)

வேறு பிரதோடம்.

பாவங்க ளெல்லாந் தீர்க்கும் பதின்மூன்றாம் பிரதோ ஷத்தில்
தேவர்க ளுலகோர் கண்டு தெரிசிக்க நின்று புன்னை
நாவலர் புகழுஞ் செந்தூர் நாதனே கந்தப் பரனே
சேவித்துக் கண்டு கொண்டேன் செய்வினை தீர்த்தாள் வாயே

பிரகாரங்கள் தோறும் வேறு.

செய்வினைதீர்க் கருள்பிரதோ டங்கள் தோறுஞ்
செந்திநக ராலயத்துட் பிரகா ரத்தை
துய்யமறை யோர்வேதங் கிதப் பாடத்
தொண்டர்கள்நற் பண்ணுடனே வாரந் சொல்ல
பையபாரி யேழுமுகு கப்பல் சுற்றி
பவனிவருந் கோலக்க ணைமேடல் லோரும்

கைதொழுதா ரனைத்தக் கண்ணீர் விட்டார்
கண்டடியேன் தரிசித்தே னகமகிழ்ந் தேனே. (136)

வேறு மாதாந்தம் சுக்கிர வாரந் தோறும்.

செந்தூர்சுக் கிரவார மாதாந் தத்திற்
றெய்வகுஞ் சரிவள்ளி யிருவ ரோடும்
அந்தரர்கோன் சிவசுப்பிர மணியன் றானும்
ஆனந்தத் துடனீல மயின்மே லேறி
வந்திருடி முனிவர்குழாஞ் சூழ்ந்து போற்ற
வையகத்தோர் புகழ்வாத் தியமுழங்க
சுந்தரமாய்ச் சந்தவரைக் கோபுரத்தைச்
சுற்றிவந்தார் தெரிசித்தோஞ் சுகம்பெற் றோமே. (137)

மாதப்பிறப்பு தோறும்

வருஷமா சப்பிறப்பு தோறுஞ் சந்த
வரைக்கோபு ரப்பிரகா ரத்தை நீதான்
திருக்கோலத் துடன்மயின்மே லேறி வள்ளி
தெய்வகுஞ் சரியுடனே சுற்றி வந்தாய்
கருணைபுரி செயந்திநா யகனே உன்னைக்
கண்டன்ப ரோடடியே னஞ்சே வித்தேன்
தெரிந்துதெரி யாமற்செய் பிழைக ளெல்லாந்
திருக்கண்பார்த் தகற்றியெனை யாளு வாயே. (138)

கிரகணம்.

சீர்பொருந்தும் வையகத்திற் செந்தூர் வந்து
சிவனடியா ரெல்லாங்கிர கணகா லந்தனில்
நீர்பொருந்துங் கந்தபுட் கரணி தன்னில்
நெறியுடனே கடற்றீர்த்த மாடி யுன்முன்
நேர்பொருந்த நின்றுன்றன் முகமே லென்று
நிகழ்வுறவா நெறியடைந்தார் செய்கை கண்டு
பேர்பொருந்து முருகாவுன் முன்னுன் வந்தேன்
பிறவிநோய் தீர்க்கருள்செய் தெனையாள் வாயே. (139)

வசனமிருக்குமவர்கள்.

அன்பர்குறிப் பிட்டபடி [illegible]
தாரம்பல பொற்பணிக ளணிந்த யன்னம்

இன்பமுட னைவேத்யம் பலவுஞ் செய்தே
இதமாய்த் தூபதீபஞ் செய்வித் தார்கள்
முன்புநின்று பக்தரெல்லாந் தெரிசித் தார்கள்
மூடனடி யேனுமங்கன் பாடிப ணிந்தேன்
என்பிழைபொ றுமன்னித் தென்னையாள்க் கொள்வாய்
இறைவனே குமர குரு பரசேன் வேலனே. (140)

காவடி.

அன்பர்சிலர் தனித்தனியு மொன்று சேர்ந்து
மாறுமுக கந்தாவுன் றனக்கு வேண்டும்
இன்பமிகும் பாலபன்னீர் முதலாயுள்ள
எந்தவகைக் காவடியு மெடுத்தே யாடி
யன்புகழைப் பாடிதிருச் செந்தூர் வந்தே
யுண்மையுடன் செலுத்தியருள் பெற்றார் நாயேன்
என்புருகித் துதியுன்மே லன்பு வையா
தேழைமையே னென்னைக்கடைக் கண் பார்த்தாள் வாயே. (141)

அக்கினிக் காவடி.

ஆயிரத்தோ டைம்பத்தி யெட்டா மாண்டு
ஆனபுரட் டாசியெட்டாந் தேதி யன்று
தூயமறை யோரொருவர் தேகமெல்லாந்
தலங்கும்வேற் குத்திச்செந் தூரில் நல்ல
நேயமுடன் சண்முகவி லாச முன்பு
செருப்புவலர்த் தழின்மேற்ல வடிநடித்து
ஞாயமா பாடியருள் பெற்றார் கண்டு
ஞாலத்தோ ரெல்லாரு மயம்பெற் றாரே. (142)

அமாவாசை தோறும்.

அவனிதனிற் றிருச்செந் தூரா லயத்தி
லமாவாசை தோறும்பிர காரந் தன்னை
தவமுனிவர் சித்தர்முத லானோர் காண
தயவுடனீ சுற்றிவந்த கோலங் கண்டு
இவ்வாலா றுமாறுவன் றன்ப ரெல்லாந்
தெரிசித்துச் சுகம்பெற்றா ரடியேன் கண்டேன்

கவலைமிடி யிடர்நீக்கி எனையாட் கொள்வாய்
கந்தனே பன்னிருகை வேற்செவ் வேளே. (143)

கார்த்திகை தோறும்.

கார்த்திகைந க்ஷத்திரத்தோ டந்திசந் தூரிலக்
கந்தாவுன் றிருக்கோலக் காக்ஷி கன்றாய்
பார்த்தானந் தங்கொண்டு பக்த ரெல்லாம்
பணிந்துதோத் திரஞ்செய்து சுகம்பெற் றார்கள்
கீர்த்தனைக ளோடுகவி மாலை பாடி
கேட்டபடியே னுங்கண்டு தெரிசிக் கின்றேன்
சேர்த்துன்னடி நீழலிலே கலந்தன் போடு
திருக்கண்பார்த் தென்னையுநீ யாருள் வாயே. (144)

நிலையங்கி.

ஆண்டில்வருஞ் சக்கிரவா ரமா தாந்த
மன்றிபிர தோடங்கார்த் திகைவி சாகம்
நீண்டமுக்ய விசேடநாட் களிற்பொன் னூற்செய்
நிலையங்கி யுடன்றிருவா பரணஞ் சாத்தி
வேண்டியநன் மலர்மாலை பணிந்து பன்னீர்
விரும்பியடி யார்தெளித்துத் தெரிசித் தார்கள்
ஆண்டசிவ குருநாத னழகைக் கண்டே
யாசையுடன் றெரிசித்தே னருள்பெற் றேனே. (145)

அடியார்களிடங் கந்தனுடைய திருவாபரணங்களைக்
காண்பிக்கிறது.

உனதுதிரு வாபரணம் பார்க்க வென்றே
உத்தியோ கஸ்தர்கணல் லடியா ரெல்லாம்
மனமகிழ்ந்து செந்தூரில் வந்து நின்றார்
மறையோர்கள் கருகூல வறை திறந்து
இனைஇனமாய் நிலையங்கி முதலா யுள்ள
எவ்வகையா பரணமெலாங் காட்டி னார்கள்
தனிவேறு மவர்களுடன் கண்டேன் கந்தா
சந்தோசம்விட் டேனருட்கண் பார்த்தாள் வாயே (146)

கந்தனுக்கு அடியார்கள் ஆபரணமணிகிறது.

கந்தன்சண் முகனைக் கொல்லாங் கண்டோர்
கனிக்கதின்மேல் வரைந்திருக்கும் பேரைப் பார்த்து

இந்தவித நகைகளிநாம் விநோத மாக
எவர்கள்பார்த் தாலுமா னந்தம் பொங்கச்
சொந்தமாய்ச் செய்தநிற்றன் பேரைச் சாற்றி
சுகுரூப னுக்களித்தா சேவிப் போமென்
றந்தரங்கத் தெளிவினைத்த படியே சேவித்
தருள்பெற்று னனந்தம் தீப லக்ஷ்மியான் றேசே. (147)

வேறு-திருச்செந்தூர் ஸ்தலத்தின் மகிமை

உலகோர்பணி கந்தன்செந் தூர்த்தலத்தி
லுள்ளகொண்டா மணிசேத் திருக்குளம் பாதி
நிலம்பெறப்பெரு குஞ்செல்ல அங்கங் குள்ள
கரையத்தோர் கேட்டுன்ன இன்ன காலம்
விலகாமல் நடக்கிறதென் றகக்கண் கொண்டு
விழித்துப்பார்த் தாற்பொருத்தை உச்சரித்து
பலவகைத்தோத் திரஞ்சொல்லித் தனித்திருந்து
பக்திசெய்வா ரென்னிறந்தோர் பலரோன் றேசே. (148)

செடி

பாண்டியன்செந் தூர்க்கடலின் கரையி னல்ல
படிகட்டி நிலைத்தவாக் குகனி டத்தில்
வேண்டினதின் படிபலகன் திறந்து மூடும்
வெளியாக்கும் பழயபடி மூடி வைக்கும்
ஆண்டில்வரு மார்கழிமா தத்தில் மட்டும்
அன்றிபதி னெருமாத மெல்லாம் பார்க்கும்
காண்டவரி தாருமையான் செயலை யார்தான்
கண்டறிந்து சொல்லவல்லோர் கல்வி யோரே. (149)

வேறு.

திருக்கோயிற் கோபுரமுன் கொடிமரமுங் கடலெதிரே திருச்செந்தூரும்
பரிந்தோரு மந்தரை மணிவீதி வீடெனும் படைத்த தென்குர்
தருக்கருடனேதெப்பக் குளமழிரு மண்டபமும் தாலுகாவும்
பெருகுஞ்சிவ ஞானிகளு நிறைந்திருக்குந் தலமகிமை பெரியதாமே. (150)

வேறு.

ஆறுமுகன் தலத்தைப்போலே அருள்புரி தலங்க ளுண்டோ
மறைபலர் துதித்து நிற்கும் வருபவர் பவத்தை நீக்கும்

இறைதர்ம நினைவுண்டாக்கும் நெஞ்சினில் ஞானமுண்டாம்
குறைவிலாச் செல்வமாகும் குணக்கோர வசந்தமம்மா. (151)

மருமலர் கொய்துதன்றாய் வள்ளிநாயகர்க்குச் சாத்தி
திருவருள்பெறுகின்றோருந் திசைதிசை கிணறுவெட்டி
வருபவர் ஸ்நானஞ்செய்து மகிழ்ந்திட வைக்கின்றோரும்
தருந்திருப்பாடசாலை வைத்தருள் பெறுகின்றோரும். (152)

பலக்கடற்கடந்து சற்கற பள்ளிகள்செய்திருக்கின்றோரும்
தவநெறிபுகுந்துயிர்க்குந் தண்ணீர் சத்திரத்திருக்கின்றோரும்
சிவநேசர்வைத்தசாலை தெரிசிப்பவர்க்கு நீறல்
குலவையத்தோர்கட்கெல்லாங் குணம்பெறுகுதம்மா. (153)

வசனமாயிருக்கின்றோரும் வளர்புராணங்கள்சொல்லி
இசையுடன் பொருள்சொல்வோரு மின்பமாய்ச் சிவாலயத்தை
திசைதிசையிருந்துசொல் லாந் தெண்டியாகுஞ் செக்கில
இசையுடன்கதைநடத்து ஞானத்தோர்களம்மா. (154)

ஆண்டிகளெனர்வந்து அபகாரமல்லபோர்க்கெல்லாம்
வேண்டிய அன்னஞ்சொர்ணம் விதிப்படிகொடுக்கின்றோரும்
பூண்டிமன்பர்வந்து புண்ணியன் கோயிற்புக்கு
ஆண்டவர் பிறவிநீக்கி ஆளெனத்திகழ்கின்றோரும். (155)

கந்தன்சண்முகனைக்கண்டு கருத்துடன்றுதிப்போர்க்கெல்லாஞ்
சந்தனமில்லைவிபூதி சவியாமற்கொடுக்கின்றோரும்
சிந்தையிலன்புவைத்துத் தினப்பூசைசெய்யும்போத்தி
அந்தமர்ப்பிள்ளைமன்னால் அறிந்தாண்டாரிவரே. (156)

வேறு-படித்தவர்கள் பேறுபயன்.

கொச்சகக்கலிப்பா.

பேரின்பத் தேன்றதும்பும் பின்னைத் தமிழினைச்செக்
தாரிற்கக் கவிருத்து உள்ளன்பாய்ச் செய்தற்புத
தாரின்பி ருக்குருட்டேன் றதும்புந் தன்மைதனைப்போர்
பாரின்பத் தேன்பருகி பரமபதமெய்துவரே. (157)

அற்புதமாலையைநல் லன்புடன்மகிழ்ந்துகேட்போர்
எப்பிறவியுமறுத்து இப்பட்டகாமியமும்பெற்று
முப்புரிநூலின்மார்பன் முக்கண்ணனென்கயிலைசேர்வார்
தப்பிதமில்லைச்சொன்னேன் தரையிதுள்ளோர்க்குத்தானே.

கன்னியர்கள் தம்முளத்திற் சடையி லாடுங்
கடலலைவா யுகந்தபெருமானைச் சீர்கொள்
நன்னகர்செந் தூர்க்குமர விடங்க னைமா
நடனஞ்செய் தெடுத்திரா திருநாளொட்டில்
அன்னகரில் லோடுகையில் வேட்டையாடு
முவக்கோலங் கண்டுகனிந் தருள்பெற் றேமே 22

9-ம் திருநாள் காலை

சுவாமிக்குத் தண்டிகை.

இணைகாக்கும் வள்ளிதெய் வானை காந்தன்
இறப்பாய்முன் பின்றுறவர் பரந்தர் நின்று
மனமகிழ்ந்து சமக்கத்தண் டிகைமே லேறி
மறைபுகழ்செந் தூரின்கண் வீதியெல்லாம்
கனைந்தேசரு மொன்பதாந் திருநாட் காலைக்
ககனத்தோர் மலர்மாரி பெய்ய முன்செய்
வினைகள்தீர்த் தருள்கொடுக்க வந்தான் றங்கள்
மேதினியிற் றெரிசித்தோம் வினையின் டோமே 23

9-ம் திருநாள் இரவு.

சுவாமிக்கு கயிலாசபருபதம் அம்மனுக்கு கமலவாகனம்.

தென்றுதமிழ் பெருகுதிருச் செந்தூர்க் கந்தன்
சிறந்தகயி லாசபரு வதத்தின் மேலும்
வள்ளிதெய் வானையுநற் கமல மேலும்
மகிழ்ந்தசத்த ரிஷிமுனிவர் சூழ்ந்து போற்ற
மெள்ள இருநாழிகையு திரவிற் சுத்தி
வீதிதொறு பவனிவரக் கண்ணுறுங் கற்றுணர்
கள்ளமில்லா வடியர்குழா முடனு மேதும்
கண்டுதெரி சித்தேனற் கதிபெற் றேனே 24

10-ம் திருநாள் காலை

சுவாமிக்கும் அம்மனுக்கும் ரதம்.

செங்கமலப் பொகுட்டுறையு மாதிகப் போதுக்
திருநடனம் புரியுஞ்செந் தூரில் வாழும்
பொங்கரவ மணிந்தசிவ சுதன்கந் தப்பன்
பூவுலகே லாமகிழக் கருணை கொண்டு

மங்கலவாத் தியங்கித முழங்கத் தேரில்
மாதிருவ ருடன்றிருநாள் பத்தின் காலை
எங்கள்வினை தீர்த்தற்கு வீதிவந்தான்
எல்லாருஞ் சேவைசெய் திடர்தீர்ந் தோமே. 25

### 10-ம் திருநாள் இரவு

சத்தாபரணம் சுவாமிக்கும் அம்மனுக்கும் தந்தப்பல்லாக்கு
வேறு.

திருவோங்கும் வளங்கள்மிகுஞ் செந்தூரிற் றிருநாள்பத்திரவிற் கந்தன்
மருவளரு மலர்க்குழலார் வள்ளிதெய்வ யானையுடன் மகிழ்ந்தன்போடு
திருவீதி யிற்பவனி சிவிகையின்மே லேறிவந்தான் சிறப்ப தாக
வருமுயர்சத் தாபரணக் காக்ஷிகண்டோ ரெல்லாரு மகிழ்ந்துய்ந் தோமே.

### 11-ம் திருநாள் இரவு

சுவாமிக்கும் பல்லாக்கு அம்மனுக்கும் பல்லாக்கு வேறு.

பத்தாநாட் டிருவிழா முடிந்த பின்பு
பதினொன்றி னிராவள்ளி யானை யோடு
சித்தன்மகன் கந்தன்மகிழ் கொண்டு செந்தூர்த்
தெருவழியாய் தண்டிகையின் மீதில் வந்து
பத்தியுடை யோர்கண்டு பணிந்து போற்ற
பலமலரா லலங்கரித்த தெப்ப மீதில்
சத்திவே லுடனேறி சுத்தி வந்தான்
தயவுடனே யருள்புரிந்தான் றரிசித் தோமே. 27

### 12-ம் திருநாள் இரவு

சுவாமிக்கும் அம்மனுக்கும் சப்பரம் ரண்டு.

மருமலர்சோ லைகள்சூழுந் திருச்செந்தூரில்
வாழ்கந்த சுவாமிபன்னி ரெண்டா நாளில்
கருணையுடன் வள்ளிதெய் வானை யோடு
கனிந்துபூஞ் சப்பரமேற் சிறப்பாய்க் கொண்டு
திருநடன சங்கீத தாள மோங்க
சித்தர்மா தவர்முனிவர் சூழ்ந்து போற்ற
திருவீதி பவனிவந்தான் நாங்க ளெல்லாம்
தெரிசித்தோ மருள்பெற்றோஞ் செயம்பெற் றோமே. 28

வாகனக்கவிதை முற்றிற்று.

சிவசண்முக நாதன் துணை.

உ

சிவமயம்.

## சித்துபுரம் வைபவம் உரைத்த அத்தியாயம்.

கொடியபா தகனொருவன் மிலேச்சன் செந்தூர்க்
கோயிற்குமரனைக்கண்டு வாளால் வெட்ட
அடியெடுத்துத் துடுக்காய்த் தகையில் கீழே
அயன்விழுந்தே வுயிரிழந்து போனா னப்பால்
படிமிதுமி லிழந்தமிலேச் சன்ச ரீரம்
பாவச்சுமை யாற்கீழே விடப்ப தாகம்
வடிவேல வனைக்கண்டு நமஸ்க ரித்து
வணங்குத்தொண் டர்கள்போது மிருந்த தன்றே. (1)

அமனுடனே தூதர்மிலேச் சனைப்பா சங்கொண்
டுருகுவந்து கட்டவரும் போது செந்தூர்க்
குமரனடி பணிகணங்க ளோடி வந்து
குகனருள்பெற் றிருக்குமுத் தமனைப் பாவம்
சுமக்குநீன் கள்தொடவே கூடா தென்று
சொல்லியே தடுத்துவிட்டா ருடனெல்லோரும்
சமனைதய விடஞ்சொல்வோ மென்று சென்று.
நடந்தகா ரியங்களெல்லா நவின்றா ரய்யா. (2)

சொன்னதைக் கேட் டியமன்வந்தா னந்த நேரம்
சுகரூப மாயிருந்த குகனைக் கண்டு
முன்னின்று தெரிசித்தான் முகத்தைப் பார்த்து
முருகனென்முன் வந்தென்ன காரிய மென்றான்
முன்னவன்கேட் கையியம னிதோகீழ் வீழ்ந்த
முழுப்பாத கனைக்கொண்டு வரவே சொல்லி
என்னிடத்தில் நின்றது தனைவிடுத்தேன்
இறைவாவுன் கணங்கள்வந்து தடுத்து மீறி (3)

இந்தமிலேச் சனையுமது பாதஞ்சேர்த்த
தென்னகா ரணமென்றே யிரந்து கேட்க

முந்தணைப் படிசெப்பா விகளா ஞறு
மூன்மறையோர் தொழுநம்மை முகம்பார்த் திந்தச்
சிந்துப்புரம் வந்திருக்கும் பேர்கள் பாவம்
தேய்ந்தொழிந்து நம்பதநீ ழல்சேர் வார்கள்
சிந்தைதனி னைந் திவன்சிந்து புரத்தில் வந்து
சேர்ந்தேனென் றறுமுகங் களையுங் கண்டான். (4)
நமக்கெதிரே வுயிர்விட்டுக் கிடந்தா னன்றி
நன்மறையோ ருடன்பேச்சும் நவின்றான் பாவம்
சுமக்கும்பா தகனிந்த நன்மை யாலே
தொடர்ந்தபா வங்களையே ஒழித்தன் பாகி
எமக்கடிமை யாய்ப்பாத நீழல் சேர்ந்தான்
இதுசத்தி யமென்று சொல்லிப் பின்னும்
உமைக்கினிமைத் தன்கந்த னருளிச் செய்வான்
உலகிலுயர் சிந்துபுரம் புகழைத் தானே. (5)
சிந்துபுரமென் னுந்திருச் செந்தூர் நல்ல
திரிசுதந் தார்களுடை ஊழு மென்றும்
புந்தியினின் நினைவாகத் துதிக்கத் தக்கப்
புகழுடைய தலமாகு மென்று சொல்லி
சந்தோஷ முண்டாக அருள்செய் தாரச்
சணபியமன் குமரனடி பணிந்து நல்ல
சிந்தையுடன் விடைபெற்றுத் தானிருக்கும்
சிறந்தபட் டணம்போனான் செருக்கற் றானே. 6
ஆதலாற் சுகமுனிவர் தெரிய யிந்த
அம்புவியிற் செந்திநகர் முருக வேள்தன்
பாதஅருள் மகிமையினை லேசா யுச்சிய
பதவிதருந் தலமென்று சத்திய மாக
வேதநெறிப் படிவியாச முனிவ ரன்று
விபரமுட னேசொல்லி யருளிச் செய்தார்
காதலாய்ச் சுகமுனிவர் மகிழ்ந்து கேட்டுக்
கந்தனடி பணிந்துநல்ல கதிபெற் றாரே. 7

இயமனுக்கு சிந்துபுரவைபவமுரைத்த
அத்தியாய முற்றிற்று.

உ

சிவமயம்.

## சந்தான விரதத்தின் பயனைச் சொல்லுகிறது.

சிவன்செயலால் காசிபன்பத் தினியாள் கர்ப்பிற்
பிறந்தவன்தான் அதிதிபின்னை வாஞ்சை யாலே
தவஞ்சேரு காசதரை யடைந்து பின்னை
திருவதா ரபவிரத மருள வேண்டும்
பவனடியை மறவாத பெரியோ யென்று
பணிந்துபிரார்த் தித்தாள்நா ரதருங் கேட்டு
சிவகுருவை வேலனுக்குப் பிரிய மான
செயல்சந்தா னம்விரதஞ் செப்பு கின்றார். 1

பாக்கியமே தருங்கார்த்தி கைமா தத்தில்
பௌரணிமையி லன்பாய்ச்செந் தூரின் கண்ணுண்
டாக்கியதோர் கந்தபுட் கரணி யுமற
றங்குள்ள தீர்த்தமெல்லா மாடிப் பாவம்
நீக்கியகு மாரனைக்கும் பிட்டெ ழுந்து
நினைந்துமாப் பரட்டிற்போய் மௌன மாக
வாக்கியத்தின் படிவடக்கு முகமாய்க் கந்தன்
மலரடிக ளெதிர்நோக்கி யிருந்து நன்றாய், 2

வலக்கைபெரு விரலால்தன் னெதிர்மேல் பக்கம்
மகிழ்ந்துசக் கரவடிவ முங்கீழ் பக்கம்
அலக்காய்முத் தலைச்சூல் வடிவ முதல்
லெருளுற இவ் விரண்டுக்கு நடுவே கந்தன்
வலக்கைஇருக் கும்வேலா யுதமும் பார்த்து
வாய்பேசா மற்றரையி லெழுதி யன்பு
பெலக்கவே பூசித்து நமஸ்க ரித்து
பெரியவன்கோ யிலைநோக்கி எழுந்து நின்று. 3

பெரியகரு ணைகள்முழுதை யுஞ்செய் யுஞ்சுப்
பிரமணியா வென்றுண்மை யோடு மூன்று
தரங்கண்டத் திவிருந்தெவ் வளவு வோசை
தடையின்றி எழும்மா அவ் வளவு வோசை

குருவருளாற் பொறச்சொல்லிப் பின்னற் குரான்
பெருங்கதிரை யடைந்திட் டிருக்கு நல்ல
அருட்டடவி வேலுறும்பி மௌன மாக
ஆறுமுக னிருக்குஞ்சந் நிதிமுன் வந்து. 4

திருச்செந்தூர்த் தலப்புரா ணத்தில் வேதஞ்
செப்பியதின் படிவிரத மிருந்த பேர்கள்
கருத்தின்படி வரவர்கள் பலன்கள் பெற்றுக்
அவனியில் வாழ்ந்திருப்பர் துண்மை என்று
உருத்தோடு கௌதம முனிவர் சொல்ல
உணர்ந்துசந் தானவிர தத்தைக் கேட்டுச்
சருக்கரம் உடனேகா சிப முனிவர்
தன்மனைவி அதிதிமனக் களித்தெண் டாளே. 5

அதிதிமகிழ்ந் திவ்விரத மிருந்துகந்தன்
அருளாலிந் திரனைப்போற் சேயைப் பெற்று
கதிபெருமி இன்றுவரைச் சோர்வு நீங்கிக்
கண்குளிர்ந்தே இருக்கின்று காத லாலே
விதிப்படிவ் விரதத்தைத் அனைவர்ச் செய்தோர்
வேலவனுக் கடிமையாய் அவன்சீர் பாத
நீதியான மோக்ஷஇன் பத்தைப் பெற்று
எந்நாளும் வாழ்வர்கள் னெறியி தாமே. 6

சம்பூரணம்.

---

1-வது புஸ்தகத்தில் 53-ம் பாட்டு பிழைதிருத்தப்பட்டது.

சேவித்தா ரன்பரெல்லாஞ் சிபவி கற்பூரத்தில்
ஆவலாயுன்னைக்கண்டு அன்புடன் சேத்தில் வந்து
காணிக்கை அதிகஞ்செய்து வைத்து கும்பிட்டே னய்யா
பாவியென் வினைகளைத் துன் பதத்தன்பு தந்தாட் கொள்வே

2-வது புஸ்தகத்தில் தோத்திரத்தில் 19-ம் பாட்டு பெழுதவில்லை.

கருணைபுரிக் தெனைபாண்டா விவ்வுலகும் பொன் னுலகுங்
கவலைபோம்
திருமுருகாவுனைமதித்துக் கொண்டெழுக் காடுமோ
சித்தம்வைத்தே.

இருமூன்று வாயாலே சொல்லேழை யென்னப்பார்
இருந்தாற்கந்த
னருளிதுவோ வென்றுலகம் பழியாதோ குறைவிலையோ
அருமைவாழ்வே.
சிவாவென்றுஞ் சரவணப வாவென்று மொருதரஞ்
செப்பினோர்கள் கருத்து
சித்தித்தபடி முடித் திருநூலை யென்றே மறை
தெரியும்படிக்கருளுதே
தவநெறியினின்றுசிவ சரவணபவாகுகா
சங்கராவென் றனுதினந்
தனியிருந் துச்சரிக் குமேழை யெனைநீத்
தருளா திருப்பையோ சொல்
புவனத்தி லேத்துமுக மாயாதமுக மதிப்
பெரு தகாசுரைக் கொன்று பின்
பொன்னகர்த்தெய் வானையைக் கன்னிவள்ளியை மணம்
புரிந்து செந்தூரில் வந்து
எவருந்துதி செய்திட நீலமயில் மேலேறி
யேகமா யிருந்தாக செய்
யிறைவனே வினையெலாந் தீர்த்தருள்செய் முருகனே
யேழைகட் கருளீசனே. (1)

சரவணப வாவென்று ஒருதரஞ் சொல்வோர்க்கு
சாயுச்சிய பதவி யீயுஞ்
சண்முக மென்றுமே சாஸ்திரஞ் சொல்வதன்
தன்மையை யுணர்ந்து குகனே
இரவுபகல் கொஞ்சமு மென்றுவும் நெஞ்சமு
மிடைவிடா தினிநினைத்து
யெப்பொழுதுஞ் சரவணப வாவென்று சொல்லுதே
இரங்கா திருப்பையோ சொல்
பாவைநடு மூலமினிற் செந்தின்மா நகர்மேவி
பாறவேற் கைப்பிடித்துப்
பகைகொண்ட சூரரைக்கொன்று விண் ணுலகெலாம்
பழையபடி குடிகளேற்றி

திருவளர்தெய் வானையை வள்ளியைச் சேர்ந்தயர்
தெவ்வுலகையுங் காக்குநற்
செல்வனே வினையெலாந் தீர்த்தருள்செய் முருகனே
சித்திப்போர்க் கருளீசனே. (2)

சேவித்த வேளையில் நீமுத்தி சிவதனை
செயமென்று அருமறை யெலாஞ்
செப்புமொழி பொய்க்குமோ வென்னமுவு தான் பொய்யோ
தேசத்தி லடிமை செய்த
பாவத்திறள்வந்து பொய்யாக்கி விட்டதோ
பன்னிருகை வேல் குமாரா வுன்
பார்வைக்கு யெதிர்நிற்குமோ வென்று வினையெலாம்
பகருவாய் வாய்திறந்து
ஆவதூ மழிவதூ நின்செய லில்லையோ
அயன்கை யெழுத் தறுதியோ
அந்தவெல்ல ஆயுதமில்லையோ நின்திரு
வருளுக்கு வலுவில்லையோ
தேவர்க்குந் தேவனே குருமுனிக் கருளிய
தேசிகா செந்தில் வாழுஞ்
செல்வனே வினையெலாந் தீர்த்தருள்செய் முருகனே
சித்திப்போர்க் கருளீசனே. (3)

மன்னர்கள் பயமுஞ் சின்ன மனிதர்கள் பயமுந்தீர
வென்னமாய்த் தவசுசெய்வே னிறைவனே கந்தநாதா
உன்னடிக் கன்பனுக்கு உபதேசஞ் செய்தென்றனை
கன்னலின் ரசம்போலெந்தன் கருத்தினி லருள்பெய்வாயே. (4)

பெய்தருட் கண்ணாற் பார்த்தென் பிழையெலாம் பொறுத்தசட
சொய்தடி யேனுன் செய்த கொடுவினை யெல்லாம்போகச் [கொண்டு
செய்தகல் லியர்க்கும் வேணி சிவனுக்கு முபதேசித்த
மெய்தவப்பொருளே செந்தூர் வேலனே ரக்ஷிப்பாயே. (5)

பொச்சமில் லன்பர் போற்றும் பூரணி புனையாள் பாலா
எச்சம யங்களுக்கு மிறைவனே நிறைந்த சோதி
அச்சமும் பயமுந்தீர அருட்கண்ணாற் பார்த்திரங்கி
இச்சமயத்தில் வந்தென் னிருவினை தீர்த்தாள்வாயே. (6)

வாயதுந் தளர்விலாத மனமும்பத் தியும் பொருந்தி
தாயகா நமசிவாயா சரவண பவனேயென்று
நேயமாய்த் துதிகள்செய்து நின்றிரு மலர்த்தாள்காண
நீயருள் புரிசெந்தூர்வாள் நேசனே தேவர்கோவே. (7)

கோவென்றுங் குமாரவென்றுங் குகாவென்று நினைத்தெல்லாக்
தாவென்று முலகமெல்லாஞ் சந்தம்போற்று முன்மேல்ப்
பாவென்னுந் தமிழின்மாலை பாடிஉன் னடியில்வீழ்ந்தால்ப்
போவென்று தள்ளுவாரோ புகழ்செந்தூர் குன்றைவேலோனே. (8)

வேலனே பசிமிகுந்த வேளைபா லழுதுநின்ற
பாலனே சாப்பிடென்று பாலளித்தவள் தன்மைந்தா
சீலனே மயில்மேல்வந்துன் தெரிசனந் தருவாய் நல்ல
கோலனே வானோர்கள் கொடுவினை களைந்தமன்னே. (9)

போனநாள்ப் போன தின்னம் புதியநாளும் போகாமல்
ஞானமோ டெய்ந்தகல்வி நலமெலாந் தந்தென்னையும்
கானமார் தினைப்புனத்துக் கன்னியை மணந்தவேலா
வானவர்க் கருளுஞ்சீலா வந்தெனை யாட்கொள்வாயே. (10)

கொன்றுவா யடிமையென்னைக் கொஞ்சமும் மஞ்சலென்றே
வின்றுவாய் கருணைகூர்ந்து வேறுடன் வினைகளெல்லாக்
கின்றுவாய் பிறவிநோயைத் தேடிசெய் சமனைத்தூரத்
தள்ளுவாய் உய்ந்தேனையா சண்முகானந்த வாழ்வே. (11)

கட்டளைக் கலித்துறை.

செய்வான் தவசித்திபெல் லென்னைவைத்தருள் செந்தம்பரக்
கொய்வான் வினைகளை வோறநல்ல குமரனவன்
தெய்வானைவள்ளிமகிழ அருள்மொழி செப்பி [illegible]
பெய்வானவ்ஞான அருளையவன்கழல் பேணுவமே.

சம்பூர்ணம்.